| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| சா. சேதுராமவர்மா,<br>அரசுத் தேர்வுகள் இயக்குநர்,<br>சென்னை – 600 006. | செய்தி ஆசிரியர்,<br>அனைத்து செய்தி ஊடகங்கள். |

**ந.க.எண். 011220 /எப்1/2021 நாள் : 23.12.2021**

ஐயா/அம்மையீர்,

பொருள் : அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை–6 – மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு, செப்டம்பர் 2021 – மறுகூட்டல் / மறுமதிப்பீடு முடிவுகள் வெளியிடப்படுவது குறித்து – செய்திக் குறிப்பு – வெளியிடக் கோருதல் – தொடர்பாக.

------

நடைபெற்று முடிந்த செப்டம்பர் 2021, மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வெழுதிய தேர்வர்களின் மறுகூட்டல் / மறுமதிப்பீடு முடிவு வெளியிடும் நாள் குறித்த **"செய்திக்குறிப்பு"** இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதனை பொதுமக்களும், மாணவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் தங்களது நாளேட்டில் / வானொலியில் / தொலைக்காட்சியில் செய்தியாக வெளியிடுமாறும், ஒலி / ஒளிபரப்பிடுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

**'இது விளம்பரம் அல்ல'** என்பதையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**இணைப்பு:** செய்திக் குறிப்பு

ஒம்/–
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்.
3. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை – 600 006**

**மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு, செப்டம்பர் 2021**

**மறுமதிப்பீடு / மறுகூட்டல் தேர்வு முடிவுகள் வெளியிடுதல்**

**குறித்த செய்திக்குறிப்பு**

நடைபெற்று முடிந்த செப்டம்பர் 2021, மேல்நிலை முதலாமாண்டு துணைத் தேர்வு எழுதி, மறுகூட்டல்–2 (Re-total-II) மற்றும் மறுமதிப்பீடு (Revaluation) கோரி விண்ணப்பித்தவர்களுள், மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்களது பதிவெண்களின் பட்டியல் **www.dge.tn.gov.in** என்ற இணையதளத்தில் (Notification பகுதியில்) **27.12.2021** (திங்கட்கிழமை) அன்று பிற்பகல் **01.00** மணிக்கு வெளியிடப்படவுள்ளது. **இப்பட்டியலில் இடம் பெறாத பதிவெண்களுக்கான விடைத்தாட்களில் எவ்வித மதிப்பெண் மாற்றமும் இல்லை** எனத் தெரிவிக்கப்படுகிறது.

மறுகூட்டல் / மறுமதிப்பீட்டில் மதிப்பெண் மாற்றம் உள்ள தேர்வர்கள் மட்டும், உடன் மேற்குறிப்பிட்ட இணையதளத்தில் தங்களது பதிவெண் மற்றும் பிறந்த தேதி ஆகிய விவரங்களை பதிவு செய்து தங்களுக்கான திருத்தப்பட்ட மதிப்பெண்கள் அடங்கிய மதிப்பெண் பட்டியலை (Statement of Marks) பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் எனவும் தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

ஓம்/–
இயக்குநர்

தேதி: 23.12.2021
இடம்: சென்னை– 600 006.